# பத்திரிக்கை செய்தி

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள வார்டு எல்லை மறுவரையறை வரைவு கருத்துருக்கள் மீது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகளை எழுத்துப்பூர்வமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் 27.12.2017 முதல் 12.01.2018 வரை தெரிவிக்கலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திடமிருந்து வரப்பெற்ற அறிவிப்பின்படி, அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை மற்றும் கருத்துக்கள் மீது நான்கு மாவட்டங்களுக்கான மண்டல அளவிலான கூட்டம் 24.01.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் (முதல் தளம்) பின்வரும் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறவுள்ளது.

24.01.2018 முற்பகல் - கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்.

24.01.2018 பிற்பகல் - காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்

எனவே, மேற்படி நாளன்று நடைபெறும் மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டத்தில், ஏற்கனவே குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வார்டு எல்லை மறுவரையறை வரைவு கருத்துருக்களின் மீது ஆட்சேபணைகள் மற்றும் கருத்துக்கள் அளித்துள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு, தாங்கள் ஏற்கனவே அளித்துள்ள மனுக்களின் பேரில் தங்களுடைய கருத்துக்களை நேரில் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.